


# 02.05.2026 செய்திகள்

## ஏப்ரல் ஜிஎஸ்டி வசூல் ரூ.2.43 லட்சம் கோடி

- இதுவே ஒரு மாதத்தில் வசூலான அதிகபட்ச ஜிஎஸ்டி தொகையாகும். முன்னதாக, கடந்த 2025, ஏப்ரல் மாதத்தில் ரூ. 2.36 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலானதே அதிகபட்சமாக இருந்தது.
- '2026, ஏப்ரல் மாதத்தில் ரூ. 2.43 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலாகியுள்ளது. உள்நாட்டு பரிவர்த்தனைகள் மூலம் கிடைக்கப் பெற்ற வருவாய் 4.3 சதவீதம் அதிகரித்து ரூ. 1.85 லட்சம் கோடியாக பதிவாகியுள்ளது. இறக்குமதி மூலம் கிடைக்கப்பெற்ற 25.8 சதவீதம் அதிகரித்து ரூ.57,580 கோடியாக உள்ளது.
- திருப்பியளிக்கப்பட்ட மொத்த தொகை ரூ. 31,793 கோடி (19.3 சதவீத உயர்வு). மொத்த நிகர ஜிஎஸ்டி வருவாய் 7.3 சதவீதம் அதிகரித்து ரூ. 2.11 லட்சம் கோடியாக பதிவாகியுள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.
- கடந்த ஆண்டு செப்டம்பரில் ஜிஎஸ்டி விகிதங்கள் இரண்டாக (5%, 18%) குறைக்கப்பட்டதால் சுமார் 375 பொருள்களுக்கான விலை குறைந்தது.

## தாயகம் திரும்பிய 104.23 மெட்ரிக் டன் தங்கம்!

- கடந்த ஆண்டு செப்டம்பர் இறுதியில் 880.18 மெட்ரிக்டன்னாக இருந்த மொத்த தங்க இருப்பு, நடப்பு மார்ச் மாத இறுதியில் 880.52 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது.
- இதில் உள்நாட்டில் இருப்பு வைக்கப்பட்டுள்ள தங்கத்தின் அளவு கடந்த ஆண்டு செப்டம்பரில் 575.82 மெட்ரிக் டன்னாக இருந்த நிலையில், தற்போது 104.23 மெட்ரிக் டன் தங்கம் இடமாற்றத்துடன் 680.05 மெட்ரிக் டன்னாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- தற்போதைய மொத்த இருப்பில் 197.67 மெட்ரிக் டன் தங்கம் மட்டும் இங்கிலாந்து வங்கி மற்றும் சர்வதேச பரிவர்த்தனை வங்கி (பிஐஎஸ்) ஆகியவற்றின் பாதுகாப்பில் உள்ளது. இதுதவிர, தங்க வைப்புத்திட்டத்தில் 2.80 மெட்ரிக் டன் உள்ளது.
- சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், இந்தியாவின் மொத்த அந்நியச் செலாவணி இருப்பில் தங்கத்தின் பங்கு 13.92 சதவீதத்திலிருந்து 16.7 சதவீதமாக அதிகரித்துள்ளது. 55,228 கோடி டாலர் அந்நியச் செலாவணி கையிருப்பில், சுமார் 46,561 கோடி டாலர் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளன.
- மீதமுள்ள தொகை வெளிநாட்டு மத்திய வங்கிகள் மற்றும் வணிக வங்கிகளில் வைப்புத்தொகையாக வைக்கப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

## இந்தியாவின் முதல் தடையற்ற சுங்கச்சாவடி: குஜராத்தில் தொடக்கம்

- சூரத்–பரூச் தேசிய நெடுஞ்சாலை–48 வழித்தடத்தில் அமைந்துள்ள சோர்யாசி சுங்கச்சாவடியில் இந்த புதிய சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இதில் சுங்கக் கட்டணம் செலுத்த வாகனங்கள் நிற்கத் தேவையில்லை.
- தானியங்கி வாகனப்பலகை அங்கீகாரம் (ஏஎன்பிஆர்), செயற்கை நுண்ணறிவு பகுப்பாய்வு மற்றும் ஃபாஸ்டேக் ஆகிய நவீன தொழில் நுட்பங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு கேமராக்கள் மற்றும் க்யூஆர் குறியீடுகள் மூலம் வாகனம் சென்றுகொண்டிருக்கும்போதே சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படவுள்ளது.
- இந்த புதிய சுங்கச்சாவடி கட்டண வசூலிப்பு முறையின்கீழ் வாகன போக்குவரத்து நெரிசல், வாகன உமிழ்வு மற்றும் சுங்கச்சாவடிகளில் மனிதர்களின் தலையீடு குறைக்கப்படவுள்ளது. வாகனங்களின் எரிசக்தி திறன் மேம்படவுள்ளது.
- மேலும் வணிக எளிமையமாக்கல் ஊக்குவிக்கப்பட்டு நாடு முழுவதும் சரக்கு மற்றும் தளவாடங்கள் விரைவாக கொண்டு செல்வது உறுதிப்படுத்தப்படுகிறது' என குறிப்பிட்டார்.